**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி., பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ம் நாள் செவ்வாய்கிழமை

**IA No.02/2025**

**In**

**O.S No.135/2016**

குருஜலா ஜெய ராமையா ......**மனுதாரர்/2 ம் பிரதிவாதி**

**//எதிர்//**

ராஜாமணி ......**எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பத்மநாமன்..B.A.,B.L.,அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கோவிந்தராசு.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கட்டளை 18 விதி 17 மற்றும் CPC பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இதன் அசல் வழக்கானது 2 ம் பிரதிவாதியான மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1,2 சாட்சிகள் விசாரணை முடிவு பெற்று மறுசாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இவ்வழக்கு 2 ம் பிரதிவாதியான பி.வா.சா.1 சாட்சியான மனுதாரை வாதி தரப்பு வழக்கறிஞர் தனது குறுக்கு விசாரணையில் தாவா கிரைய ஆவணத்தில் கண்டுள்ள தொகை வருமானவரி கணக்கில் வருமா ? மேற்கண்டுள்ள வருமானவரியின் கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா ? அதற்கு லைசென்ஸ் உண்டா ? என்று

மனுதாரரிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டுள்ளதில் மனுதாரரால் வருமானவரி கணக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என பதில் கூறியுள்ளார். எனவே மேற்கண்டுள்ள பதிலில் கூறப்பட்டுள்ள வருமானவரி கணக்கில் ஆவணங்களை தாக்கல் செய்து மனுதாரரது சாட்சியினை நிரூபிக்க ஏதுவாக பி.வா.சா.1 சாட்சியான மனுதாரரை மறுஅழைப்பு செய்து விசாரிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்:-</u>**

மனுதார் தனக்கு தமிழ் தெரியாது என ஏற்கனவே தெரிவித்துள்ளார். ஆனால் பிரமாணப்பத்திரிக்கையில் தமிழில் எழுதப்பட்டு அதில் கையெழுத்து செய்துள்ளார். இது எவ்வாறு ஏற்புடையது என்பதை மனுதார் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மேலும் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது. விசாரணை முடிக்கப்பட்டுவிட்ட நிலையில் கட்சியை நிரப்புவதற்காக மனுதார் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். வருமானவரி செலுத்தப்பட்டதாக தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்கக்கூடிய ஆவணங்கள் அல்ல. இந்த ஆவணங்களை குறியீடு செய்யவும் இயலாது. அதனடிப்படையில் மனுதாரை மீண்டும் அழைத்து விசாரிக்க சட்டத்தில் வழிவகை இல்லை. இந்த மனு எந்தவகையிலும் ஏற்புடையதல்ல. எனவே மனுதாரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 ஆன 2 ம் பிரதிவாதியை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது கிரைய பத்திரத்தில் கண்டுள்ள தொகை வருமானவரி கணக்கில் வருமா மேற்கண்ட வருமானவரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டதால் பி.வா.சா.1 யை மறுஅழைப்பு செய்து அவர் மூலம் அவர் சாட்சியத்தில் கூறிய வருமானவரி கணக்கிற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய மனுதாரரை மறுஅழைப்பு செய்து விசாரிக்க வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதுாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனையில் மனுதாரர் தரப்பில் தமிழ் தெரியாது என்று ஏற்கனவே தெரிவித்துள்ளதாகவும், ஆனால்

பிரமாணப்பத்திரிக்கையில் ஏற்கனவே தமிழில் எழுதப்பட்டு கையெழுத்து செய்துள்ளது எவ்வாறு ஏற்கத்தக்கது என்று மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளதாகவும், விசாரணை முடிக்கப்பட்டுவிட்ட நிலையில் அவருடைய கட்சியை நிரப்புவதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், வருமானவரி செலுத்தப்பட்டுள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்கக்கூடியதில்லை என்றும், அந்த ஆவணங்களை குறியீடு செய்ய முடியாது என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

பி.வா.சா.1 தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்தவர். அவர் ஏற்கனவே சாட்சிய நிரூபணவாக்குமூலம் தமிழில் தாக்கல் செய்திருக்கிறார். அதில் தனக்கு தமிழ்மொழி கொஞ்சம் கொஞ்சம் தெரியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் குறுக்கு விசாரணையின் போது சாட்சிக்கு தமிழில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவரால் புரிந்துகொண்டு ஆங்கிலத்தில் பதிலளிப்பது அல்லது தமிழில் பதிலளிப்பது கடினமாக இருப்பதால் வழக்கிடை மனு எண். 01/2025 படி தெலுங்கு மொழி பெயர்ப்பாளர் நியமிக்கப்பட்டு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். தற்போது இம்மனுவின் பிரமாணப்பத்திரிக்கையும் தமிழில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர் தமிழை புரிந்துகொள்ள முடியும் என்றும், பேசுவதில் சிக்கல் என்பதால் பிரமாணப்பத்திரிக்கை ஏற்கத்தக்கது என்று வாதிட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் ஏற்கனவே மனுதாரருக்கு தமிழ் மொழி கேள்வி எழுப்பதில் பதிலளிப்பதில் பிரச்சனை இருப்பதால் மொழி பெயர்ப்பாளர் நிச்சயம் செய்யப்பட்டதாகவும், அந்த மொழி பெயர்ப்பாளரிடம் கையெழுத்து வாங்கி இந்த பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் கூட அது ஏற்கத்தக்கது என்றும், அதற்கு மாறாக இங்குள்ள வழக்கறிஞரிடம் கையெழுத்து வாங்கி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு பிரமாணப்பத்திரிக்கை ஏற்கத்தக்கது இல்லை என்றும், மனுதாரரால் தாக்கல் செய்ய கோரும் வருமானவரி கணக்கு ஆவணங்கள் முழுமையானவை இல்லை என்றும் மனு நிராகரிக்கத்தக்கது என்றும் வாதிட்டார்.

பி.வா.சா.1ல் குறுக்கு விசாரணையின்போது மொழி பெயர்ப்பளார் மூலம் தான் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். இருந்தாலும் அவரது நிரூபணவாக்குமூலத்தில் தமிழ் கொஞ்சம் கொஞ்சம் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதியின் சாட்சிய நிரூபணவாக்குமூலமும் இங்குள்ள வழக்கறிஞர் ஆகிய மேற்படி சங்கதிகள் உறுதி கூறி என் முன்னால் கையெழுத்து செய்தார் என்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அதேபோல் இம்மனுவின் பிரமாணப்பத்திரிக்கையும் இங்குள்ள வழக்கறிஞரால் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

பிரதிவாதிக்கு தமிழ் கொஞ்சம் கொஞ்சம் தெரியும் என்பதாலும், அவர் தமிழில் பேசுவதில் தான் தடுமாற்றம் இருப்பதாகவும், இங்குள்ள வழக்கறிஞர் பிரமாணப்பத்திரிக்கையில் அவர் முன்பாக கையெழுத்து செய்தார் என்று உறுதிபடுத்தியிருப்பதாலும், இம்மனு பிரமாணப்பத்திரிக்கை ஏற்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. பி.வா.சா.1 யை மறுஅழைப்பு செய்யும்பட்சத்தில் அவரை தெலுங்கு மொழிப்பெயர்ப்பாளர் மூலம் விசாரணை செய்தால் போதுமானது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்வதற்காக பி.வா.சா.1 யை மறுஅழைப்பு செய்யலாமா என்று பரிசீலித்து பார்க்கும்போது பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது 13 முதல் 15 வரையிலான கேள்விகள் வருமானவரி கணக்கை பற்றி கேட்கப்பட்டுள்ளது. எனவே தாவா கிரைய ஆவணம் ஏற்பட்ட வருடத்தில் 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்த வருமானவரி கணக்கை தாக்கல் செய்வது இவ்வழக்கெழு வினாவை தீர்மானிப்பதற்கு அத்தியாவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வருமானவரி கணக்கு விபரங்கள் முழுமையாக இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் முழுமைத்தன்மை குறித்து மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யும்போது ஆட்சேபனை எழுப்ப உரிமையுள்ளது என்பதாலும், வருமானவரி கணக்கு தாக்கல் செய்வது வழக்கெழுவினாவை தீர்மானிக்க அவசியமானது என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இருப்பினும் மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தினை கருத்திற்கொண்டு இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு ரூ.1000/- செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பி.வா.சா.1 யை மறுஅழைப்பில் விசாரணை செய்யும்போது ஏற்கனவே விசாரணையில் ஆஜரான தெலுங்கு மொழிப்பெயர்ப்பாளர் மூலம் விசாரணை செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.01.27 16:58:02 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**

**I.A.No. 02/2025**

**O.S.No. 135/2016**

**நாள். 27.01.2026**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**